எந்த விரல்களுக்குள்ளும் சிக்காமல்
எந்த மொழியிலுமில்லாச் சொற்களால்
எழுதிக்கொண்டே இருக்கிறது
ஒரு கவிதையை
எந்தப் பறவையும் உதிர்க்காத இறகு.

அலைந்தலைந்து அரூபத்திலிருந்து
அள்ளி வந்து நிறைக்கிறது
வெறுமையின் பக்கங்களை,
புரட்டி விடத் தேவையற்ற
நீளமான பக்கங்களில்
நீண்டு கொண்டே போகிறது
கடைசிவரியென்று
இல்லாமல் போன கடைசி வரி.

கலைந்து போகும் வரம்
பெற்றவர்கள் வாசித்துக் கொள்ளலாம்
நிச்சலனத்தின் ஆயுள் கவிதைகளை....

- கார்த்திக் முத்துவாழி